# திருவையாறு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

**அ.வ.எண்: 176/2017**

**வா.சா.3**

**நாள்: 03.07.2025**

வாதி தரப்பு சாட்சியாக வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 44 ஆம் விதியின் கீழ் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | சிவராம் |
| தந்தை பெயர் | சுந்தர்ராஜன் |
| கிராமம் | |
| வட்டம் | |
| தொழில் | கிராம நிர்வாக அலுவலர், திருக்காட்டுப்பள்ளி |
| வயது | 28 |

**முதல் விசாரணை :**

நான் நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கபெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தற்சமயம் திருக்காட்டுப்பள்ளி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட புல எண்.41C/1, 41C/3 ஆகிய புலஎண்களில் 2017ம் ஆண்டு முதல் தற்போது வரை உள்ள அடங்கல் பதிவேட்டை கொண்டு வந்துள்ளேன். 2017ம் ஆண்டு முதல் தற்போது வரை அடங்கல் பதிவேட்டை பார்வையிட்டதில் புல எண்.41C/1 காசிநாதன் அனுபவத்தில் உள்ளது. ஆனால் புல எண்.41C/3 அடங்கலில் யார் பெயரும் குறிப்பிடாமல் உள்ளது. மேற்படி புல எண்.41C/1–க்கு காசிநாதன் என்பவருக்கு B Memo கொடுக்கப்பட்டு அவர் அரசுக்கு தண்டத்தீர்வை செலுத்தி வருகிறார்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மேற்படி சொத்துக்கள் அனைத்தும் பொதுப்பணித்துறை வகையை சேர்ந்தது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் திருக்காட்டுப்பள்ளி பொதுப்பணித்துறையின் பராமரிப்பில் உள்ளவை என்றால் சரிதான். மேற்படி

சொத்துக்களை வாதிகள் ஆக்கிரமித்து செய்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

மறுவிசாரணை : இல்லை

/ஒ.ம்/
திரு.P. ரமேஷ், B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.